# Life Principles Shown by the Ramayana

**T. Mangala Rajan**
*Doctoral Researcher, Registration No: 2421327011002*
*Vivekananda College, Agasteeswaram, Kanyakumari District*
*Manonmaniam Sundaranar University, Abishekaptti, Tirunelveli*

**Dr. R. Ramakumar**
*Assistant Professor, Tamil Research Center*
*Vivekananda College, Agasteeswaram, Kanyakumari District*
*Manonmaniam Sundaranar University, Abishekaptti, Tirunelveli*

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: அக்டோபர்**

**வருடம்: 2025**

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17255908

**Abstract**
*The entire Ramayana emphasizes the need to follow Dharma and live righteously and emphasizes the strength of family ties, especially brotherly affection. The life of Sita-Rama shows that husband and wife should understand each other and live on the basis of Dharma. Through Vali we can realize that peace and liberation in life can be achieved by complete surrender to God and that God can be reached through devotional paths such as hearing, chanting and contemplating the name of Rama*

**Keywords:** *Arithu, Piraadi, Thuvandameniyan, Nokkinaan, Vanchinam, Idukkan, Eakapathini, Anrthalarnthamugam*

**References**

1. Ramayanam Sidbhavananda Text Ramakrishna Tapovanam Thirupparaithurai-Trichy
2. Kamba Ramayanam Dr. Ra Srinivasan anniyakam Publication Chennai
3. Kamba Ramayanam Source and Text A.S. Gnanasambandhan New Century Book House
4. Thirukkural source and text M. V. Selvaraj Gemini Press, Nagercoil

# இராமாயணம் காட்டும் வாழ்கை நெறி

**த. மங்கள ராஜன்**
முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண் : 2421327011002
விவேகானந்தா கல்லூரி, அகஸ்தீஸ்வரம், கன்னியாகுமரி மாவட்டம்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், அபிசேகப்பட்டி, திருநெல்வேலி

**முனைவர் இரா. இராமகுமார்**
உதவிப் பேராசிரியர், தமிழுயராய்வு மையம்
விவேகானந்தா கல்லூரி, அகஸ்தீஸ்வரம், கன்னியாகுமரி மாவட்டம்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், அபிசேகப்பட்டி, திருநெல்வேலி

**ஆய்வு சுருக்கம்**
*இராமாயணம் முழுதும் தர்மத்தை பின்பற்றி, நீதி நெறியுடன் வாழ வேண்டும் என்பதோடு குடும்ப உறவுகளின் வலிமையையும், குறிப்பாக சகோதர பாசத்தையும் வலியுறுத்துகிறது. கணவனும், மனைவியும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு, தர்மத்தின் அடிப்படையில் வாழ வேண்டும் என்பதை சீதா-இராமரின் வாழ்க்கை காட்டுகிறது. இறைவனிடம் முழுமையாக சரணடைவதன் மூலம் வாழ்க்கையில் அமைதியையும், முக்தியையும் அடையலாம்,இராம நாமத்தை கேட்பது, பாடுவது, நினைப்பது போன்ற பக்தி மார்க்கங்கள் மூலம் இறைவனை அடையலாம் என்பதை வாலி மூலம் உணர முடிகிறது.*

***திறவுச்சொற்கள்:*** *அரிது, பிராட்டி, துவண்ட, மேனியன், நோக்கினான், வஞ்சினம், இடுக்கண், ஏகபத்தினி, அன்றலர்ந்தமுகம்*

## முன்னுரை

அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது என்று ஔவை பிராட்டி மானிடப் பிறவியினைப் பெருமையாக கூறியுள்ளார். ஏனெனில் மனித பிறவியில் அவன் வாழ்வாங்கு வாழ்ந்து வீடு பேற்றினை அடைய முடியும். அவன் எவ்வாறெல்லாம் வாழ வேண்டும் என்றும் எப்படி வாழக் கூடாது என்றும் முன்னோர்கள் காட்டிய வழிமுறைகளைத் தான் காவியங்கள், புராணங்கள், இதிகாசங்கள் மூலமாக அறிகிறோம். அதில் இராமாயணம் காட்டிய வாழ்க்கை நெறிகளை பற்றி எடுதுரைப்பதாக இக்கட்டுரை அமையப் பெற்றுள்ளது.

## இராமாயணத்தில் சகோதர பாசம்

கோசலையின் மகன் இராமன், கைகேயியின் மகன் பரதன் இருவரும் வடிவாலும் குணத்தாலும் ஒத்தவர்கள். கைகேயி பரதனுக்கு ஆட்சிகிடைக்கவேண்டும்என்று கூறிய போது, பரதன் அரசாட்சி பெற்றது நான் அரசாட்சி பெற்றது போன்றதே என்று கூறுவதன் மூலம் பரதன் மேலுள்ள பாசத்தை இராமன் வெளிப்படுத்துகிறார். இதனை கம்பர்

**மன்னவன் பணி அன்றாகில் நும்பணி மறுப்பெனோ என்**
**பின்னவன் பெற்ற செல்வம் அடியேன் பெற்றதன்றோ? (கம்ப-1604)**

என்று குறிப்பிடுகிறார்.

அது போன்று இராமனைக் காணாது பரதன் அண்ணனைக் கண்டு அவனை திரும்ப அழைத்து வந்து அரசாட்சி செய்யப் போகிறேன் என்று கூறிக்கொண்டு அண்ணனை காணச் செல்கிறான் பரதன்

சித்திரக்கூடத்தின் தொலைவில் வரும் போதே இலக்குவன் அவனைக் கண்டு கோபமுறுகிறான். அப்போது, பரதனின் நிலை குறித்து இராமன் இலக்குவனுக்கு விளக்குகிறான்

**தொழுது உயர் கையின்ன துவண்ட மேனியன்**
**அழுது அழி கண்ணினன் அவலம் ஈது என**
**எழுதிய வடிவம் ஒத்து எய்துவான் தனை**
**முழுதுணர் சிந்தையான் முடிய நோக்கினான்**
**(கம்ப-2423)**

என்ற பாடல் மூலம்

இராமன் இருக்கும் திசையை நோக்கி தொழுத கையினாகவும், இராமனைக் காணாது துவண்ட மேனியை உடையானாகவும், அழுதக் கண்களையும் அவலத்தின் வடிவமாகவும் நின்ற பரதனை இலக்குவனுக்கு விளக்கி கூறுகிறான்.

பரதனோ அண்ணன் கானகம் சென்று விட்டான் என்பது தெரிந்தவுடனே தனது தாயிடம் நீ ஒரு பெண் என்பதால் உன்னைக் கொல்லாமல் விட்டு விடுகிறேன் என்றும் இப்பொழுதே சென்று அண்ணனை அழைத்து வந்து அரசாட்சி செய்ய வைக்கிறேன் என்று இராமன் சென்ற திசையினை நோக்கி செல்கிறான்

சித்திரக்கூடத்தில் இராமனைச் சந்தித்த பரதன் அண்ணனிடம் திரும்ப வந்து அரசாளச் சொல்கிறான் அது முடியாமல் போகவே,

**ஆம் எனில் எழ் இரண்டு ஆண்டில் ஐய நீ**
**நாம நீர் நெடுநகர் நண்ணி நாணிலம்**
**கோமுறை புரிகிலை என்னின் கூர் ஏரி**
**சாம் இது சாதம் நின் ஆணை சாற்றினேன்**
**(கம்ப-2507)**

என்ற பாடல் மூலம்

அண்ணா நீ பதினான்கு ஆண்டுகள் கழித்து வந்து அயோத்தியினுடைய அரசாட்சி பொறுப்பினை ஏற்கவில்லை எனில் தீயினுள் புகுந்து விடுவேன் இது உன் மேல் ஆணை என்று அண்ணனுக்காக தனது உயிரையும் விடத் துணிகிறான்.

புறநானூற்றுப் பாடல் 300-ல் ஒருவன் தனது அண்ணனைப் போரில் கொன்றிருந்தால், அந்தப் பழிவாங்கும் தம்பியைத் தான் அடுத்த நாள் அழிப்பேன் என்று வஞ்சினம் கூறும் தம்பியைப் பற்றி கூறுகிறது. இது சகோதர பாசத்தின் ஓர் எடுத்துக்காட்டாகக் கருதப்படுகிறது.

**சாதி வேறுபாடற்ற தூய நட்பு**

அன்பாலும், நட்பாலும் ஒன்று சேர்ந்து உற்றுழி உதவிகள் பெறும் உயர்ந்த நிலையை இராமனின் நட்புச்சூழல் நமக்குப் புலப்படுத்துகிறது. அரச குலத்தைச் சார்ந்த இராமன் வேடர் குல குகனுடன் நட்பு கொண்டார். குரங்கினச் சுக்கிரீவனுடன் நட்பு கொண்டார். தாயினும் நல்லானாகிய குகனைப் பார்த்து இராமன் என்னுயிர் அனையாய் நீ என்று போற்றுகிறார். மேலும்,

**குகனொடும் ஐவர் ஆனோம் முன்பு பின் குன்று சூழ்வார்,**
**மகனொடும் அறுவர் ஆனோம் எம்முழை அன்பின் வந்த**
**அகன்அமர் காதல் ஐய நின்னொடும் எழுவர் ஆனோம் (கம்ப-6507)**

என்று உடன்பிறந்தவராக நோக்கும் உயர் பண்பே உண்மையான நட்புக்கு இலக்கணமாக காட்டுகிறார். அன்பும் தூய உள்ளமும் சாதி வேற்றுமையை அடித்து வீழ்த்திய நிலையை இதன் மூலம் நாம் காணலாம்.

சங்க இலக்கியங்களில் வகைபடுத்தியிருக்கும் உறவுகளில் நட்பு சிறப்பிடம் பெறுகிறது. நட்புக்காக திருக்குறள் நான்கு அதிகாரங்களை ஒதுக்கியிருக்க்றது நெஞ்சத்து அகநக நட்பது நட்பு என்றும் அழிவின்கண் அல்லல் உழைப்பதாம் நட்பு என்றும் இடுக்கண் களைவதாம் நட்பு என்றும் கொட்புன்றி ஒல்லும்வாய் ஊன்றும் நிலை என்றும் நட்பு பற்றிவள்ளுவர்பெருமானார்குறிப்பிட்டுள்ளதை காண முடிகிறது.

### இராமாயணம் உணர்த்தும் பன்பாடு

தன்னுள் அனைவரையும் அனைவருள்ளும் தன்னையும் காண்பது பாரத பண்பாடு ஆகும். அதற்கிணங்க இராமபிரான் ஒரு இறை அவதாரமாக மண்ணில் வந்து ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதை அனைவருக்கும் வாழ்ந்து காட்டியவன் ஆவான்.

ஒருவனுக்கு ஒருத்தி என்னும் ஏகபத்தினி விரதத்தை அனைவருக்கும் எடுத்துக் காட்டி தனக்கு ஒத்தப் பண்பினை இல்லாதவராயினும் அவர்களுடன் நட்பு பூண்டு தனக்கு நிகராக்கிய பெருமை இராமனைச் சாரும் படகோட்டியான குகனை தனது சகோதரனாக ஏற்றுக் கொண்டதோடு அவன் கொண்டு வந்த தேனையும் மீனையும் அன்போடு ஏற்றுக் கொண்டமை உயரிய நட்புக்கு சான்றாகும்.

அது போன்று காட்டில் வாழ்ந்து கொண்டிருந்த சபரி கொடுத்த எச்சில் கனிகளை சுவைத்து உண்டு மகிழ்ந்தார். சீதையைக் கவர்ந்த இராவணனைப் பற்றிய செய்தியை தெரிவித்து விட்டு உயிரை விட்ட ஜடாயுவுக்கும் ஈமக் கிரியைகள் செய்து தனது நன்றியுணர்வை வெளிப்படுத்துகிறர். தான் சுக்கிரீவனுக்குக் கொடுத்த வாக்குப்படி அடுத்தவன் மனைவியை கவர்ந்தவனுக்கு மரணமே தண்டனை என்று வாலியைக் கொன்று சுக்ரீவனை கிஷ்கிந்தாபுரிக்கு முடிசூடி வைக்கிறார் வாலியோ கடைசி நேரத்தில் தம் தவறுகளை உணர்ந்து ராம் ராம் ராம் என்று இயம்பிக் கொண்டு முக்திநிலை அடைகிறான். அது போன்றே அனுமன் தனது ஆழமான பக்தியை வெளிப்படுத்துகிறார் இராமனும் அவரை பக்தனாகவே ஏற்றுக் கொள்கிறார்

### இராமயணத்தில் கற்பு

தன் கணவனையன்றி பிற ஆடவனைக் கனவிலும் நினைக்காது வாழும் வாழ்க்கையே கற்புநெறி எனப்படுகிறது. அது போன்று கற்புடைய மங்கையர்க்குக் கணவனே கண்கண்ட தெய்யம் எனும் உயர்ந்த கொள்கையை மனதுக்குள் சீதை கொண்டிருந்தாள், இன்பத்திலும் துன்பத்திலும் கணவனை பிரியாது அவற்றில் தானும் பங்குகொள்ள வேண்டும் என்பதை சீதை தன்னுடைய வாழ்வில் கடைபிடித்து வந்து ள்ளமையை கம்பர் பாடல்களின் வழியே மெய்ப்பித்துள்ளார். இராமன் காட்டிற்குக் செல்லும்போது நீ இங்கிருத்தலே நலம் என்று கூறுகிறார் ஆனால்அப்போதும் நான் உங்களுடன் இருப்பதே நலம் உம்மை பிரிந்து இருப்பதை விட வெம்மையான காடு உண்டோ என்று இராமனுடன் காட்டுக்குப் புறப்படுகிறாள். அது போன்று இராமனும் சீதையை மட்டுமே தன்னுடைய மனைவியாக பார்ததோடு மற்ற பெண்களை இறைவடிவமாக பார்க்கிறத் தன்மை கற்பின் வடிவமாக இராமனும் ஒளிர்வதை அறிய முடிகிறது.

### மனிதனும் தெய்வமாகலாம்

மனிதனின் இலட்சியமே இறைநிலை அடைவது தான் எனவே இடையில வரும் உலகியல் இன்பங்கள் நிலையற்றவை. அவைகளை துச்சமென கருத வேண்டும் என்ற கருத்தினை இராமாயணம் வலியுறுத்துகிறது. இந்தநாட்டினை ஆளும்ராஜபதவிதனக்குக் கிடைத்த போதிலும் கைகேயி அதனை பறித்துத் தன் மகன் பரதன் நாடாள வேண்டும் இராமன் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செல்ல வேண்டும் என்று கூறுகின்ற போது இராமனின் முகமோ அன்றலர்ந்த முகம் போல் காணப்பட்டது

ஒரு வானரமாக கருதபட்டவன் தெய்வீக நிலைக்கு உயர்ந்துள்ளமைக்கு அனுமன் இராமனிடம் கொண்டிருந்த பக்தியும் நல்லிணக்கமும் காரணமாகும் அது போன்றே மிருகம் என்ற நிலையில் இருந்த வாலி இராமனிடம் தண்டனை பெற்ற பின்பு தன்னுடைய உண்மை நிலையை உணர்ந்து

தன் தவறை உணர்ந்து மனிதனாகிறான். இறக்கும் தருவாயில் தன் தம்பி சுக்ரீவன் தவறு செய்தால் அவனை மன்னிக்கும் படி இராமனிடம் கேட்டுக் கொண்டதன் மூலம் வாலி தெய்வீக மனிதன் ஆகிறான்

**வாழ்கை நெறி**

நாம் மலை போல் நம்பிய ஒருவர் நம்மை கை விட்டால் நாம் எப்படி உடைந்து போவோம்.

உறவினர்களை, நண்பர்களை எப்படி அரவணைத்துப் போவது, பெரியோரிடம் மரியாதை, ஆசிரியரிடம் பக்தி, மனைவியிடம் அன்பு, அண்டியவர்களை காக்கும் உயர் குணம், மற்றவர்களின் உயர் குணங்களை பாராட்டும் நற்பண்பு, பொறுமை, வீரம், இதமாக பேசுவது, இனிமையாகப் பேசு வது, மக்களை எடை போடுவது, அன்பு பாராட்டுவது, மற்றவர்களின் நலனில் அக்கறை கொள்வது, பாசம், இறை உணர்வு, என்று வாழ்வின் அத்தனை பரிணாமங்களையும் தொட்டுச் செல்கிற இராமன் என்ற கதாபாத்திரம்.

வாழ்க்கையை எப்படி வாழ வேண்டும் என்று காட்டிச் செல்வதை இராமாயணம் மூலம் உணர முடிகிறது.

**முடிவுரை**

ஒரு மனிதனிடம் சகோர பாசம் எவ்வாறு இருக்க வேண்டும் கற்பிற் சிறந்தவராக எவ்வாறு வாழ்வது, நண்பனிடம் எப்படி பழக வேண்டும், எதிரியிடம் கூட அன்புடன் நடந்து கொள்வது, தர்மத்தின் வழியே ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதற்கான தத்துவத்தையும் அன்பு, தியாகம், கடமை, அர்ப்பணிப்பு, பெற்றோரை மதிப்பது, நண்பர்களைப் பாதுகாப்பது, மனைவியை நேசிப்பது, அரசிற்கு விசுவாசமாக இருப்பது போன்ற பல்வேறு வாழ்வியல் நெறிகளை இராமாயணம் வழியாகநாம் அறிகிறோம்.

**துணை நூல்பட்டியல்**

1. இராமாயணம் சித்பவானந்தர் உரை ராமகிருஷ்ண தபோவனம் திருப்பராய்த்துறை திருச்சி
2. கம்ப ராமாயணம் முனைவர்ரா சீனிவாசன் அணியகம் பதிப்பகம் சென்னை
3. கம்ப ராமாயணம் மூலமும் உரையும் அ.ச.ஞானசம்பந்தன் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
4. திருக்குறள் மூலமும் உரையும் மி வ செல்வராஜ் ஜெமினி அச்சகம் நாகர்கோயில்